# புதிய இதயம்

திங்கள் மின்னிதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

இதழ் 8 எழு...ஒளிவீசு... எசாயா 60:1 ஆகஸ்ட் - 2022


## ஆசிரியரிடமிருந்து....

# இதய அன்பர்களே...



சுதந்திரக்காற்றை சுவாசிக்க பல உயிர்களின் மூச்சுக்காற்று நின்றது. இந்திய மண்ணிற்கு இது உன்னத நாள். அகிம்சை வழியில் கிடைத்த அன்பு திருநாள். அடிமைச் சங்கிலியை உடைத்து சுதந்திரக் காற்றை சுவாசித்த பெருநாள். இரத்தத்தாலும் தியாகத்தாலும் விளைந்த பொன் நாள்.

'இந்த உலகத்தில் எந்த நாடெல்லாம் அடிமைபட்டு கிடக்கிறதோ, அந்த நாடெல்லாம் எனது தாய் நாடு' - சே.குவேரா.

ஆம், இன்று சுதந்திரம் பெற்ற பல நாடுகள் அடிமைத்தளையின் கயிறுகளால் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இந்தியா விதிவிலக்கல்ல. சுதந்திரம் என்ற வார்த்தைக்கே சுதந்திரமில்லா காலமாக மாறிக் கொண்டிருக்கிறது. சுதந்திரம் என்பது கானல் நீராகிவிட்டது. சுதந்திரம் என்பது கற்பனை வார்த்தையாகிவிட்டது.

சுதந்திரமாம் சுதந்திரம்... மார்தட்டும் இந்தியரே...
உண்மைச் சுதந்திரம் உனக்கு உண்டா?
வெள்ளையர்கள் ஆட்சியை விட இந்த கொள்ளையர்கள் ஆட்சியில் கிடைத்ததா சுதந்திரம்...
உன் உரிமைக்காக போராடும் சுதந்திரம் உனக்கு உண்டா?...
பச்சிளம் பெண் குழந்தை பாதுகாப்பாய் வாழ சுதந்திரம் உண்டா...
மாட்டுக்கு கிடைத்த சுதந்திரம் மனித உயிருக்கு உண்டா...
உன் நிலத்தில் பயிரிட்டு உன் உழைப்பில்
உண்டு மகிழும் உரிமை உண்டா?...
நீ நினைத்ததை படித்து முன்னேற வழி உண்டா...
பணத்திற்கிருக்கும் மதிப்பு உன் நேர்மைக்கு உண்டா...
மதுவுக்கு கிடைத்த பாதுகாப்பு மகளிருக்கு உண்டா...
மதவெறி பிடித்த மாக்களால் மனிதநேயம் புதைக்கப்படுவது சுதந்திரமாகுமா...

'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கு கேயடிமை செய்து வாழ்வோம்'.

என்ற பாரதியின் சுதந்திரக் கூற்றை மறந்து சாதி, மதம். இனம், மொழியால் பிரிந்து வாழ்வது சுதந்திரமாகுமோ? சிந்திப்போம்...

சுதந்திரம் அவனவனுக்குரியது
என்று கருதக்கூடாது
மற்றவர்கள் நலனுக்கும்
என்று கருதவேண்டும்!... பெரியாரின்

கூற்றின் படி நேசம் கொண்டு தேசம் போற்றும் இந்த விடுதலைத் திருநாளில் தேசிய கீதம் தேசமெங்கும் ஒற்றுமையை பரப்புவது போல தேச ஒற்றுமைக் காப்போம். 76-வது சுதந்திர திருநாட்டில் அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழா நாளில்

உள்ளத்தில் செருக்குடன்
சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்;
வலியோரை அரியணையினின்று
தூக்கி எறிந்துள்ளார்;
தாழ்நிலையில் இருப்போரை
உயர்த்துகிறார்; பசித்தோரை நலன்களால்
நிரப்பியுள்ளார்; செல்வரை
வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.

லூக் 1:50-53, அன்னையில் இதயத்தில் எழுந்த சமூக விடுதலை நம் தேச விடுதலையாகட்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு, உடை, உறைவிடம் என அனைத்தும் கிடைக்க செய்வோம். ஓங்கும் நம் குரலில் நம் உரிமைகளை மீட்டெடுப்போம். சாதி, மத பேதங்கள் நம் நாட்டிற்கு இனி வேண்டாம் என உறுதியேற்போம். ஊழல் தவிர்த்து, உழைப்பாலும் உண்மையாலும் உயர்ந்து காட்டுவோம். வளர்ச்சி என்ற பெயரில் வேளாண்மையை அழிக்கும் துரோகிகளை சம்மட்டி கொண்டே எதிர்த்து எழுவோம். தொழில் நுட்பம் என்ற பெயரில் ஏழை எளிய மக்களின் பிழைப்பில் அடிக்கும் ஏதேச்சதிகார போக்கை உடைத்தெறிவோம். முன்னேற்றம் என்ற பெயரில் மண்ணை, மண் வளத்தை சுரண்டும் அயோக்கியர்களை விரட்டியடிப்போம். நாகரிகம் என்ற பெயரில் பெண்களை சீரழிக்கும் கொடூரர்களை குழிதோண்டி புதைப்போம். மக்களாட்சி என்ற பெயரில், சுய உரிமை, சமத்துவம், சமூகநீதி போன்றவற்றை பறிக்கும் கயவர்களை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவோம்.

'எவன் ஒருவன் தன் உரிமைகளை எப்பொழுதும்
துறகாத்து கொள்ள தயாராக இருக்கிறானோ,
யார் ஒருவன் பொது விமர்சனத்துக்கு
அச்சப்படாமல் இருக்கிறானோ,
எவர் அடுத்தவர் கைப்பாவையாக மாறாமல்
போதிய சிந்தனையும் சுய மரியாதையும்
பெற்று இருக்கிறானோ,
அவனே சுதந்திரமான மனிதன்!

- டாக்டர். அம்பேத்கார்.

இதய அன்பர்களே... என்றும் எங்கும், எதற்கும் போராட்டங்களின் வழியே உரிமை மீட்கும் இச்சூழலில், சுதந்திரக் காற்றை சுவாசிக்க இந்தியனாய் ஒன்றுபடுவோம்... தியாகம் செய்வோம்... மீண்டும் இரத்தம் சிந்தியாவது இந்தியக் கொள்ளையர்களிடமிருந்து பாரத தேசத்தை மீட்டெடுப்போம். இனிமேலாவது, பிறக்கின்ற குழந்தைகள் புதிய இந்தியாவில் பிறக்கட்டும்!

## சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

இதய அன்பில்...

அருள்பணி. இ[illegible]..

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்



# விடுதலையும் விண்ணகமும்!

வனஜா அமல்ராஜ், சூளை - சென்னை

ஆகஸ்ட் மாதம் என்றவுடன் நம் தாய்த் திருநாட்டின் திருவிழாவும் தாய்த் திருஅவையின் பெருவிழாவும் நினைவில் வருவது பெருமிதமே. அன்று அன்னியர் கையில் அடிமைப்பட்டுக்கிடந்த நம் தாய்த் திருநாடாம் இந்தியா அண்ணல் காந்தியடிகளாரின் அகிம்சைவழி அறப்போரால் அமைதி கண்டது ஆகஸ்ட் 15-ல் விடுதலை கொண்டது. சுதந்திரக் கொடி, கம்பத்தின் உச்சியில் பறக்க, தேசிய கீதம் நாவினில் இனிக்க, ‘வந்தே மாதரம்’ என்ற தொனி காதினில் ஒலிக்க, சுதந்திரக் காற்றை சுவாசிப்பதில் நம் உள்ளம் உருகுது மனமோ மகிழுது. நெஞ்சமும் நெகிழுது அன்றோ!

ஊரெங்கும் தெருவெங்கும் கொடியேற்றி நம் நாட்டின் விடுதலை நாளை குதூகலமாய்க் கொண்டாடிடும் இந்நன்நாளிலே நம் தாய்த் திருஅவையானது விண்ணகத்தில் வீற்றிருக்கும் நம் அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருநாளை கடன்திருநாளாய்க் கொண்டாடி மகிழ்வது நம் அனைவருக்கும் ஆனந்தமே அது பேரின்பமே. திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதரால் 1950-ம் ஆண்டு நவம்பர் 1-ம் நாளன்று, ‘அன்னை மரியாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணேற்படைந்தார்’ (Assumption) என்று விசுவாசக் கோட்பாடாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதுதான் அன்னையின் விண்ணேற்பு பெருவிழா. அமல உற்பவியாய், கன்னித் தாயாய், கடவுளின் தாயாய், மனுக்குல மீட்புத் திட்டத்திற்காக தம்மை அடிமையாகக் கையளித்து தாழ்நிலைநின்றதாலன்றோ கடவுள் மரியாளைக் கண்ணோக்கினார்!. எல்லாத் தலைமுறையினராலும்



'பேறுடையாள்' எனப் போற்றுதற்குறியவராய் அரும்பெரும் செயல்கள் பல அவருக்கு ஆற்றினார்! அதிஉன்னத நிலைக்கு உயர்த்தினார்!!

ஆண்டவர் இயேசு தம் சீடர்களிடம் கூறும்போது, 'எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும் நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார் என்கிறார் (யோ.12:26) இவ்வுலகில் இறை இயேசுவை பின்பற்றி அவருக்கு நாம் தொண்டு செய்யும்போது, நமக்கென்று குறிக்கப்பட்ட பணியை குறித்த காலத்திற்குள் அவரது திருவுளத்திற்கேற்ப செய்து முடிக்கும்போது நாம் கடவுளை மாட்சி படுத்துகிறோம். இதனால், இறைஇயேசுவின் மாட்சியில் பங்கு பெறுகிறோம். 'குறித்த காலத்திற்கு முன்பே உங்கள் பணிகளைச் செய்துமுடியுங்கள். அவ்வாறாயின் குறித்த காலத்தில் கடவுள் உங்களுக்குப் பரிசு வழங்குவார்' என்கிறது சீராக்கின் ஞானம் 51:30. விண்ணகமே அந்த பரிசு!

எரேமியா 29:11-ல் நம் ஆண்டவர், 'உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியுமன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல' என்கிறார். புவியில் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் கடவுளின் திட்டம் ஒன்றுண்டு. நமக்கென்று குறிக்கப்பட்ட ஆயுட்காலமும் இங்குண்டு. நம்மைக் குறித்த கடவுளின் திட்டத்தை அறிந்து, அதைக் குறித்த காலத்தில் நாம் நிறைவேற்றும்போது அவர் நமக்காய் ஏற்பாடு செய்துவைத்துள்ள உறைவிடங்களிலும் நமக்கு இடமுண்டு (யோ.14:2-3) அவரது மாட்சியிலும் நமக்கு பங்குண்டு (யோ.17:22). இவற்றை நினைக்கும்போது உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்துப் பாய்கிறதன்றோ! ஆகவேதான், 'நீங்கள் முழு ஞானத்தையும் ஆவிக்குரிய அறிவுத்திறனையும் பெற்றுக் கடவுளின் திருவுளத்தைப்பற்றிய அறிவை நிறைவாய் அடையவேண்டும்' (கொலோ.1:9) என்கிறார் தூய பவுல்.

இறைமகன் இயேசு, இறை திட்டத்தை நிறைவேற்றவே, பாவத்தின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க மரியாளின் மடியில் அடிமைக்கோலம் எடுக்க, இயேசு என்னும் பெயரில் உலகின் ஒளியாய் உதிக்க தம்மை ஒப்புக்கொடுத்தார். குருதி சிந்தி குருசினிலே உயிர்பலியானார். மூன்றாம் நாளில் மரணத்தை வென்று வெற்றி வேந்தனாய் உயிர்த்தெழுந்தார். தம்மை பின்பற்றி வந்த அனைவருக்கும் ஆசி வழங்கிக்கொண்டிருந்தபோதே விண்ணகத்திற்கு ஏறிச்சென்றார்(Ascention). உயிராய் உயிர்ப்பாய் இருந்து விடுதலை பெறும் அனைவரும் விண்ணகம் செல்லும் வழியானார் வழிகாட்டும் ஒளியுமானார்.

ஆகவே, அன்பானவர்களே! இறை இயேசுவின் முன்னால் முழங்காலை முடக்குவோம்! பாவத்திலிருந்து விடுதலை, சாபத்திலிருந்து விடுதலை, நோயிலிருந்து விடுதலை, பேயிலிருந்து விடுதலை, சாவிலிருந்து விடுதலை. மனம் மாறுங்கள் விண்ணரசு நெருங்கிவிட்டது என்ற நற்செய்தியை முழங்குவோம்!. மறைநூல் தரும் மன உறுதியாலும் ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகிறது. ஆகவே, எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்வோம் துன்பத்தில் தளரா மனத்துடன் இருப்போம் இறைவேண்டலில் நிலைத்திருப்போம் (உரோ.15:4,12:12). நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம விடுதலை (1பேது 1:9) பெற்று உயிர்த்தெழுவோம்! விண்ணகம் செல்வோம்!! உன்னதர் இயேசுவின் உன்னதமான உடன்பணியாளராய் இருந்து உன்னத நிலை அடைந்த அருளன்னையின் விண்ணேற்றம் திருஅவையினர் அனைவருக்கும் நம்பிக்கையூட்டும் முன்னேற்றம்!.

'எதிர்நோக்கைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக! இவ்வாறு தூய ஆவியின் வல்லமையால் நீங்கள் இன்னும் மிகுதியான எதிர்நோக்குடன் வாழ அருள்புரிவாராக' (உரோ.15:13).

ஆமென்! அல்லேலூயா!!

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்

# தமிழ் அறம்

தொடர்ச்சி,

மரபுப்பாவலர். அகன், கீரனூர், புதுக்கோட்டை (மாவட்டம்).



சலம் என்னும் நீரால் ஆடைகளைத் தூய்மை செய்யும் செயல்தானே சலவை செய்தல்?

ஒரே அளவிலான 7 வெண்கலக் கிண்ணங்களில், வெவ்வேறு அளவுகளில் சலத்தை நிரப்பி, அவற்றைச் சிறுகோலால், இசைப்பதற்குரிய அக்கருவியை சலதரங்கம் என்கிறோம்!

நீரைக்குறித்துத் தோன்றிய மூத்தமுதற் சொல்லே சலம்! அத்தீந்தமிழ்ச் சொல்லின் முதல் எழுத்தான 'ச' - விற்குப்பதில், 'ஜ' - என்னும் கந்து எழுத்தைப்போட்டு, எழுத்தை மாற்றி ஏமாற்றும் வம்ப வடுகர், 'ஜலம்' என்று மாற்றினர்!

ஓர் இனிய தமிழ்ச்சொல்லின், ஓர் எழுத்தை மாற்றிவிட்டால், அச்சொல் வேற்றுமொழிச்சொல் என்று ஆகிவிடுமோ? அச்சொல்லிற்கான வேரும், பொருளும், காரணமும் நம் தமிழ் மொழியிலன்றோ உள்ளன! அதனால், தமிழ்ச்சொல் திருடர்களின் திருட்டுச்செயல் வெளிச்சத்துக்கு வந்துவிட்டதே...!

## கந்து எழுத்துகள்:

நம் தமிழ்நாட்டை வன்போரில் வென்று கி.பி.250 இல் ஆளத்தொடங்கிய கன்னடக்களப்பிரர் என்னும் வடுகர், வையை ஆற்று மதுரைநகரின் தமிழ்ச் சங்கத்தையும், அரிய நூலகத்தையும் நெருப்பிட்டு எரித்தழித்தனர்! அக்கொடுங்கோலர்க்குப்பின், கி.பி.6 ஆம் நூற்றாண்டில் பல்லவத் தெலுங்குவடுகர்களும், அவர்களுக்குப்பின் துளுவ விசயபுரத்து நாயக்கரும்,

அவர்களுக்குப்பின் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பிற்காலச் சோழர் எனப்படும் வடுகத்தெலுங்குப் பொய்ச் சோழரும், அதன்பின் மராத்தி வடுகர்சிவாசியும், அதைத் தொடர்ந்து தெலுங்குத் திருமலைநாயக்கரும்... என, வடுகரின் கொடுங்கோலாட்சிக்காலம் தமிழையும் தமிழரையும் வதைக்கும் காலமாகவே இருந்தது!

அக்காலத்தில், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், தமிழ்ச் செய்திகளைப் பொறிக்கும்போது அச்செய்திகளில் அவர்கள் புகுத்திய சமற்கிருதச் சொற்களைப் பொறிக்க இயலாமல் விழித்தனர்! அதனால், தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்களை இணைத்துச் சில எழுத்துகளை அமைத்து, அவற்றிற்குச் சமற்கிருத ஒலிப்புகளை ஏற்றி, அவற்றைத் தமிழ்ச்சொற்களோடு கலந்தனர்!

- தமிழ் எழுத்தான ‘ஐ’- இன் வரிவடித்தைச் சிதைத்து ‘ஜ’ - என மாற்றினர்.
- துமிழின், ‘உ,டி’ என்னும் ஈரெழுத்துகளையும் இணைத்து “’ என்றும்,
- தமிழின் ‘ச’ எழுத்தோடு “’ வை இணைத்து, ‘க்ஷ‘’ - என்றும்,
- தமிழின் ‘ள,ல’ ஈரெழுத்துகளையும் இணைத்து ‘ஸ’ - என்றும்,
- தமிழின் ‘வ,ற’- ஈரெழுத்துகளையும் இணைத்து ‘ஹ’- என்றும்,
- தமிழின் ‘பா,நி’- ஈரெழுத்துகளையும் இணைத்து ‘ஸ்ரீ’- என்றும்,

புதிய வரிவடிவங்களை உருவாக்கினர்? இவ்வாறு தமிழ்ச் செய்திகளின் சொற்களில், சமற்கிருத ஒலிப்புச் சொற்களைப் பிணைந்து எழுதுவதற்குப் பயன்படுத்திய அந்த எழுத்துகளைக், கந்து - எழுத்துகள் எனத் தமிழ்ச்சான்றோர் குறிப்பிட்டுப் புறக்கணித்தனர்!

கந்து - என்ற தமிழ்ச் சொல், இணைபினண, சேர், கட்டு எனப் பொருள்படும்!

வளர்ப்பு விலங்குகளின் கழுத்துப் பட்டையில் ஒரு கயிற்றைக் கட்டி, அக்கயிற்றின் மறு முனையை ஒரு தூணிலோ, கம்பத்திலோ, கழியிலோ பிணைத்துக்கட்டப் பயன்படும். அந்தத் தூணோ, கம்பமோ, கழியோ, கந்து எனப் பெயர்பெறும்!

இணைப்பதைக் குறிக்கும் வினைச்சொல் - கந்து! இணைக்கப்பயன்படுவதன பெயர்ச்சொல்லும் - கந்து!

‘காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்’ - என்னும்

திருக்குறள், ‘தெரிந்து தெளிதல்’ என்னும் 51 ஆம் அதிகாரத்தில் உள்ள 507 ஆம் பாடலாகும்!

காதன்மை - கதவும் தன்மை
கதுவு - பற்று
கதுவுதல் - பற்றுக்கொள்ளுதல், பற்றிடுதல்

- ஒலியைக் கதுவும், பற்றும் செயலைச் செய்யும் புலன் உறுப்பே, கதவு - காது ஆகும்!
- ஒரு கட்டடத்தின் சுவரைப் பற்றிக் கொண்டு, திறக்கவும், மூடவும், பயன்படும் கட்டடத்தின் உறுப்பே, கதுவு - கதவு!
- ‘தன் இல்லற வாழ்க்கைக்கு ஏற்ற இணை இவரே’ - என்று முடிவு செய்து, ஓர் ஆணோ, ஒரு பெண்ணோ, ஒருவர்மேல் ஒருவர் மனத்தால் கொள்ளும் பற்றே, மனத்தால் பற்றிக்கொள்வதே, கதுவல் - காதல் !

‘தான் பற்றுக்கொண்ட, அல்லது தன்மேல் பற்றுக்கொண்ட காரணத்திற்காகவே, அறிய வேண்டியவற்றை அறியாத ஒருவரைத் தனது செயற்பாடுகளுக்குத் துணையாகத் தன்னோடு இணைத்துக் கொண்டால், பல்வகை இடர்கள் ஏற்படும்’ - என்பதே மேற்குறிப்பிட்ட திருக்குறளின் பொருள் ஆகும்!

## கந்து - க்ரந்த :

கந்து - என்னும் தமிழ்ச் சொல்லைக், ‘க்ரந்த’ - என்று, சமற்கிருத்தில் பலுக்குவர்!

பலுக்குதல் - என்ற தமிழ்ச்சொல், உச்சரித்தல் எனப் பொருள் தரும்!

கந்து - க்ரந்த!

இதனைத் தமிழ் மரபுக்கேற்ப ‘கிரந்தம்’ என்பர்!
ஒரு நூலின், அல்லது உரையின் மற்றொரு படியை,
படி - ப்ரடி - ப்ரதி (பிரதி)
மெது - ம்ருது (மிருது)
பவளம் - ப்ரவள - ப்ரவாள (பிரவாளம்)
கமுகு - க்ரமுக - (கிரமுக)
மண் - ம்ருண (மிருண)
மதங்கம் - ம்ருதங்க (மிருதங்கம்)
தமிழ - த்ரமிள - த்ரவிட (திராவிட)
என்றே சமற்கிருத்தில் பலுக்குவர்!

அடைப்புக்குள் இருக்கும் சொற்கள், சமற்கிருதப் பலுக்கல்களைத் தமிழ் மரபுக்கேற்பத் தமிழர் திருத்திக் கொண்ட சொற்கள் ஆகும்.

இந்த திருத்தங்களால், அச்சொற்களும் தமிழ்ச் சொற்கள் போன்றே, போலியாகத் தோன்றித தமிழ்மொழியையும், தமிழர் என்பதையும் சிதைத்தும், வதைத்தும் வருகின்றன! எனவே, அடைப்புக்குள் உள்ள போலிச் சொற்களை அறவே ஒதுக்க வேண்டும்.

ஜ,‘.க்ஷ‘,ஸ,ஹ,ஸ்ரீ - ஆகிய கந்து எழுத்துகள், சமற்கிருத வரிவடிவ எழுத்துகள் அல்ல!

அதைப்போன்றே, தமிழ் எழுத்துகளும் அல்லவே அல்ல!

தமிழ்ச் சொற்களோடு, சமற்கிருதப் பலுக்கலை (உச்சரிப்பை) இணைப்பதற்காக, வடுகர்கள் செய்து கொண்ட திருட்டு வரிவடிவங்களே அவை ஆகும்.

இந்த கந்து (கிரந்த) எழுத்துகளை நம் தமிழ்ச் சொற்களோடு கலந்து பேசுவதும், எழுதுவதும், நம் தீந்தமிழைக் கெடுப்பதோடு, தமிழர் நம் மொழிமானத்தையும், மாண்பையும் கெடுத்தழிக்கும்! எனவே, இவ்வடுகள் எழுத்துகளைத் தமிழர் நாம் புறகணிக்க வேண்டும். அறவே ஒதுக்குதல் வேண்டும்!

திட்டமிட்டு, முயற்சிசெய்து ஒரு செயலில் வெற்றி பெறுபவரைச், ‘செயல் அரசர்’ - எனப் போற்றுவது தமிழின் - தமிழரின் மரபு ஆகும்!

இத்தீந்தமிழ்ச் சொல்லின் முதற்பகுதியான, செயல் - என்பதில் உள்ள ‘ச’-வுக்கு, ‘ஜ‘ - என்றும், அரசர் - என்பதை, அரஜர் - ரஜர் - ராஜா எனத்திரிந்தும், இரண்டையும் இணைத்து, ஜெயல்ராஜா - ஜெய்ராஜா - ஜெயராஜா - என, அடிவயிற்றிலிருந்து ஒலித்தும், பெருங்கேடு செய்தனர் வடுக ஆட்சியர்!

அரசர்க்கரசன் - ராஜராஜன் என்றாகியது! ராஜராஜன் இராஜேந்திரன், ஜெயங்கொண்டான் - என்று தஞ்சை வடுகப் பொய்ச் சோழர் கூத்தாடியாது. ஊலகறிந்த ஒன்றல்லவா..?



## ஜூலை மாதம்

## யோவான் நற்செய்தி
11 முதல் 21 வரை

## சரியான விடை எழுதியோர்

1. Sr. Shirley,
   St. Joseph Convent,
   Chennai.

2. Mrs. Vanaja Amalraj,
   Chennai.

3. A. Kaniga Rose,
   Tharuvaikulam,
   Thoothukudi.

4. Stella Jeyaraj,
   Sivagangai.



ஜெ. ஜெஸ்டஸ் சுபாஷ்
ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி, அச்சிறுபாக்கம்.

நீ சாதிக்கப் பிறந்தவ(ன்)ள்
காலை எழும் கதிரவனே
எம் பிஞ்சுகளை மூவாறு மாதங்கள்
உறங்க வைத்ததென்ன...!
மான்குட்டிகள் போல்
மரத்தடியில் துள்ளித்திரிந்த எம்
குழந்தைகளை...
சில வலைதளங்களில் சிறைபிடித்ததென்ன...
தாய்ப்பறவையின் குரலுக்கு சிறகினடியில்
ஓடிவந்த எம் பிள்ளைகளை...
விரியன்போல் விரட்டிவிட்டதென்ன...
கைப்பேசி வாங்கித்தர முடியாத சில
பெற்றோர்களை
(காலனே) காலமெல்லாம் கண்கலங்க
வைத்ததென்ன...
சோலைவனமாய் வளர்ந்த சிந்தனைகளை...
பாலைவனமாய் ஆக்கினதென்ன...
காலமே... காலனே...
கல்வி கரைந்ததென நினைத்தாயோ...?
இல்லை... இல்லை...
பூவில் மூன்றில் இரண்டு பங்கு நீர்
போல் கடலடா கல்வி...!
பொங்கி வருவேன் பொறுத்திரு...
காற்றாய் வருவேன் காத்திரு...
பெருமழையாய் வருவேன் மறைந்திரு...
நெருப்பாய் வருவேன் நீங்கியிரு...
எழும்பு...! எழும்பு...!
எம்மாணவ பேரினமே தூசிளை உதறிவிடு !
தொற்றுகளின் தொல்லைகளை
மனத்திலிருந்து நீக்கிவிடு
நீ சாதிக்கப் பிறந்தவன் (ள்)
பெருந்தொற்றுகள் தோற்றது உன்னிடமே...!

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்

வினாடி வினா – 6 (விடைகள்)

யோவான் நற்செய்தி

11 முதல் 21 அதிகாரங்கள்

விடைகள்

1. யோவான் : 15 . 7,

யோவான் : 15 . 14

2. யோவான் : 18 . 22, 23

3. யோவான் : 20 . 1, 3, 6, 7 4.

பொருத்துக :

அ.) யோவான் : 18 . 10

ஆ.) யோவான் : 11 . 54

இ.) யோவான் : 14 . 17, 16 . 13

ஈ.) யோவான் : 19 . 13

5. யோவான் : 16 . 8 - 11

6. அதிகாரம் வசனம் குறிப்பிடுக :

அ.) யோவான் : 17 . 9

ஆ.) யோவான் : 15 . 4

7. யார்? யாரிடம்? கூறியது :

அ.) யோவான் : 21 . 5

ஆ.) யோவான் : 12 . 20,21

8. சரியா? தவறா?

அ.) தவறு - யோவான் : 21 . 11

ஆ.) சரி - யோவான் : 19 . 12

9. யோவான் : 12 . 50

யோவான் : 13 . 11

10. யோவான் : 19 . 25

யோவான் : 11 . 5





# சொல்வதை செய்

SR. செலஸ்தின் மேரி (SAB), தான்சானியா.

நம் அன்றாட வாழ்வில் எத்தனை மனிதர்களை கடக்கின்றோம், அவர்கள் அனைவரும் சொல்வதை கடைப்பிடிக்கிறார்களா? என்பது எல்லோருடைய மனதிலும் எழுகின்ற ஒரு கேள்வி. ஆனால் நம் ஒருவருக்கு இதை நான் செய்கிறேன் என்று வாக்குஅளித்தால் எந்த காரணம் வந்தாலும் அதனை மறக்கவும், மறுக்கவும் செய்தால் என்ன நேரும் என்று இந்த கதை வழியாக அறிவோம்.

கண்டால் அனைவரும் வியந்துப்போவர் அத்தகைய கண்ணைக்கவரும் அரண்மனையில் நிலா என்ற அழகிய இளவரசி தன் வீட்டாரோடு வாழ்ந்து வந்தால். ஒருநாள் அந்த இளவரசி தங்க பந்து ஒன்றை தனது கையில் வைத்து விளையாடி மகிழ்ந்து வந்தால். எதிர்பாராதவிதமாக அந்த தங்க பந்து துள்ளிச் சென்று உருண்டோடும் நீரோடையில் விழுந்தது. அதனை எடுக்க முயன்ற இளவரசி நிறைய நேர போராட்டத்திற்குப் பின் தனது முயற்ச்சியில் தோல்வியடைந்தாள். வருத்தத்தின் அழுத்தம் அதிகரித்து இனி எப்படி அரண்மனைக்கு செல்வது என்று அறியாமல் விம்மி அழத் தொடங்கினாள்.

இளவரசியின் அனைத்துச் செயல்களையும் ஒரு ஓரமாக கள்ளில் அமர்ந்து கவனித்து வந்த ஒரு தவளை அவள் கண்ணில் படுமாறு அவள் முன் சென்று, அவளை அழுகையில் இருந்து மீட்டெடுக்க முயன்று சத்தம் எழுப்பியது. திடீரென்று கண்களை துடைத்தவாறு இளவரசி எங்கிருந்து சத்தம் வருகிறது என்று திரும்பிப் பார்த்தால். அசுத்தமாகவும், அறுவறுப்பாகவும் உள்ள தவளையைக் கண்டு முகம் சுளித்தால். ஆனால் தவளை அவள் வேதனையை அறிந்து உதவ முயன்று என்னால் அந்த பந்தை மீட்டெடுக்க முடியும், ஆனால் அதற்கு முன் நீங்கள் என்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற வாக்கு

கொடுக்க வேண்டும் என்று வினவியது. இளவரசியோ முதலில் உங்களுடைய விருப்பம் என்னவென்று அறிந்தால் பின் வாக்கு கொடுப்பதா? அல்லது வாக்குகொடுக்காமல் இருப்பதா என்று சிந்திப்பேன் என்று மொழிந்தால். சரி என்று தனது விருப்பத்தை சித்தரிக்கத் தொடங்கியது. அதாவது உங்களுக்கு அந்த, தங்கப் பந்தை மீட்டெடுத்து ஒப்படைத்தால் பதிலுக்கு நீங்கள் உணவு அருந்தும் மேசையில் அமர்ந்து உங்களின் தட்டில் இருந்து உண்ணவும்.

பின் உங்கள் மெத்தையில் உறங்கவும் அனுமதித்தால், நான் நீங்கள் விரும்பும் பந்தை கண்டுபிடித்து கொடுப்பேன் என்று கூறியது. இளவரசியும் சம்மதித்து வாக்குக் கொடுத்தால், சரி உனது விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்றாள், பத்து நிமிடத்திற்குள் அந்த தவளை கையில் தங்கப் பந்தோடு அவளிடம் சென்றது. இளவரசியோ பந்தை தவளையின் கையில் இருந்து பறித்து திரும்பிப் பார்க்காமல் அரண்மனைக்குச் சென்று வேகமாக கதவை மூடினாள். இரவு நேரம் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு இளவரசி சென்று திறந்து பார்த்தாள் மீண்டும் அதே தவளை வேகமாக கதவை மூடிவிட்டாள், உடனே இளவரசியின் தந்தை யார் அது இந்த நேரத்தில் என்று சத்தம் எழுப்ப இளவரசி பயத்தில் நடந்த அனைத்தையும் விரிவாகத் தந்தையிடம் விவரித்தாள். தந்தையோ பதிலுக்கு இளவரசியே நாம் ஒருவருக்கு இதை செய்வேன் என்று வாக்கு அளித்தால் அதனைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் யாருக்கும் வாக்கு கொடுக்காமல் இருக்க வேண்டும். தவறு உன் மேல் தான் உடனே தவளையை அழைத்து அதன் விருப்பத்தை நிறைவேற்று என்று கூறியவாறு தந்தை உறங்கச் சென்று விட்டார்.

மறுநாள் காலையில் தவளை அரண்மனைக்கு அழைத்துச்செல்லப்பட்டது. இளவரசி தான் உண்ணும் தட்டில் உணவளித்து தான் உறங்கும் அறைக்கு தவளையை அழைத்துச் சென்றாள், மெத்தையில் தவளையை அமர வைத்தாள். உடனே தவளை அழகிய இளவரசனாக மாறியது. பிரமிப்படைந்த இளவரசி இது என்ன அதிசயம் எப்படி நீங்கள் தவளையின் உருவம் கொண்டிருந்தீர் என்று கேட்டாள், இளவரசனும், நான் கொடுத்த வாக்கு நிறைவேற்ற தவறியதால் மந்திரவாதி ஒருவன் என்னை சபித்து தவளை உருவத்தில் உலாவருவீர் எனவும் உங்களுக்கு கொடுத்த வாக்கை யார் நிறைவேற்றுகிறார்களோ, அந்த நிமிடம் மீண்டும் இளவரசனாக அவதரிப்பீர் எனவும் எனக்கு சாபம்விட்டான். பல வருடங்களுக்குப் பின் இன்று தான் அது நிறைவேறியது என்று கூறி மகிழ்ந்தான். இளவரசியும் மகிழ்ந்து இளவரசனை மணந்துகொண்டாள்.

ஆம் இனியவர்களே நம்மைப் படைத்த தேவனும் வார்த்தை மாறாதவர். இன்று நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்ற கள்வனுக்கு விண்ணக வாழ்வை அளித்தார். மீண்டும் நான் வருவேன் என்று மொழிந்ததைப்போல உயிர்தெழுந்தார். உங்களின் இறுதி காலம் வரை உங்களோடு இருப்பேன் என்று அனுதினம் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துகிறார். உங்கள் கால் கல்லின் மேல் மோதாத படி தம் தூதருக்கு அவர் கட்டளையிட்டுள்ளார்.

கொடூர கொரோனா தாண்டவத்திலும் உங்களையும் என்னையும் அதில் விழாமல் மீட்டெடுத்தது என்னுள் விசுவாசம் கொள்பவன் என்றுமே வாழ்வான் என்பதை உணர்த்தவே.

நினைத்ததை முடிப்பவனும், கொடுத்த வாக்கை கடைப்பிடிப்பவனும் உலகளவில் புகழப்படுவர். அன்று யாரோ ஒரு மகனாய் சொல்லப்பட்ட வாக்கு, அவன் இறந்தப்பின்னும் போற்றப்படுகிறது.

## வாக்கு மனிதரான தெய்வம்

வார்த்தை மாறாமல் வாழ்வளிக்கும் போல் வளர்ந்திடும், வாழ்வில் உயர்ந்திடுவோம், சொல்வதை செய்பவளாக ∴ செய்பவனாக மாறிடுவோம்.

# தேசப்பற்று உள்ளவர்களுக்காக

பிரின்ஸி.அ, சென்னை.

தமிழா தமிழா நாளை நம் நாளே...
தமிழா தமிழா நாடும் நம் நாடே...
ஏழு எழுத்து "வந்தே மாதரம்"
நான்கு எழுத்து "இந்தியா"
இரண்டும் சேர்ந்தது தான் நம் "சுதந்திரம்"...
இந்தியா நமது தாய்நாடு
இந்நாட்டின் பெருமைக்காக
என்றும் பாடுபடுவோம்...
"நம்பற்குரியிர் அவ்வீரர் தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார்"...
என்கிறார் மகாகவி சுப்ரமணிய பாரதியார்...
நம் இந்திய நாட்டிற்காக அயராது உழைத்து
பாடுபட்ட நம் இந்திய தேசத்தின்
தியாகிகளை நினைவுக்கூறுவோம்...
அவர்கள் பெற்று தந்த சுதந்திரத்தை
என்றும் காப்போம்...
நாம் சுவாசிக்கவும், நேசிக்கவும்
நமக்கென ஒரு நாடு
விடுதலை கொண்டாடு...
சுதந்திர தின நல்வாழ்த்துகள்...

# நிலம்

லூர்து ஏஞ்சல், ஆசிரியர்,
அடையார், சென்னை.

“காணி நிலம் வேண்டும் - பராசக்தி

காணி நிலம் வேண்டும்!” என்றான் முண்டாசு பாரதி.

“ஓர் இனத்தின் வாழ்க்கை முறையும், பண்பாட்டுக்கூறுகளும் அந்த இனம் சார்ந்திடும் நிலத்தின் பின்னணியில் தான் அமையும்”

என்றார் நிலவியல் அறிஞர் குரோவ் ஹோட்ஜ்.

இக்கூற்று பண்டைத் தமிழர்களுக்கு முற்றிலும் பொருந்தும்.

தங்கள் வாழ்ந்த நிலத்தை

குறிஞ்சி மலையே!

முல்லை வனமே!

மருத நிலமே!

நெய்தல் கடலே!



பாலை வெயிலே!

என் ஐந்து வகையாக பிரித்து, இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர்.



இத்தகு பெருமை வாய்ந்த நிலம் தற்போது பேசினால் என்ன பேசியிருக்கும்? சிந்தனையில் துளிர்த்த கற்பனையே!

நில் மனிதா நில்! நான்தான் நிலம் பேசுகிறேன்!

நில் மனிதா நில்,
உன்னோடு ஒரு சில நிமிடங்கள்
பேச விழைகிறேன்.

அயர்ந்து நீ படுக்க, நடந்து பயில,
தளம் தருபவள் நான்!

பயிர்பச்சை மேனியெங்கும் தரித்து,
உன்பசி ஆற்றி, வளம் சேர்ப்பவள்
நான்!

உயிர்மூச்சுக்கு உன்னத
தருக்கள் தந்து, உன் நலம்
நாடுபவள் நான்!

உயிர்களின் தாகம் தணிவிக்க,நீர்
சுரந்து, உளம் பூரிப்பவள் நான்!
நீ இடும் கழிவுகள் தின்று, நஞ்சு
நீக்கி, உரமாய் ஆக்கி, பயிராய்
பரிணமித்து, உனக்கே உணவாய்
உருமாறுபவள் நான்!

ஊமிழ்ந்தாய், போற்றினாய்,
தூற்றினாய், குடைந்தாய்,
தோண்டினாய், பின் நீயே அதில்
விழவுஞ்செய்தாய்!

அத்தனையும் ஜீரணம், சக்தியாக
பரிணாமம், இன்னொன்றாக
அவதாரம்!

இருப்பினும் அமுதம்
ஊட்டியவள்மேல், அமிலம்
ஊற்றினாய்!

ரசாயனமும், விஷவாயும்,
உயிர்ச்செல்லை அரிக்கிறது!
இவையெல்லாம் போதாது என்று
பிளாஸ்டிக் பிசாசை வேறு என்மேல்
ஏவி எறிகிறாய்!

எனது ஜீரணமண்டலம்
ரணமாகிவிட்டது! அஜீரணத்தால்
நான் நலிவடைகிறேன்!

எனக்கு மூச்சு முட்டுகிறது
குழந்தாய்! மூச்சு முட்டுகிறது!

கேட்கிறது! உன் குற்றச்சாட்டும்
சற்றே என் காதில் விழுகிறது!

பாரபட்சமானவள் நான் என்கிறாய்!!

வறண்ட தரிசைச் சிலருக்கும்,
வளங்கள் திரண்ட பசுமைப் பரிசை
சிலருக்கும் ஓரவஞ்சனையுடன் வாரி
வழங்கினேன் என்று....

வீரபாரதி பாடிய, பண்டமாற்றுமுறை
மறந்தனையோ! குணம் குன்றி,
தரம் தாழ்ந்தனையோ!

சுரண்டிக்கொழுக்க என் செழுமை
உன் சுய நலத்துக்கல்ல...

ஈரமற்றவனே! உன் சகோதரன்,
கண் ஈரமும் வற்றிக் காய்கிறதே,
உனக்கு தெரிகிறதா...

ஆறறிவில் பகிர்ந்து உண்ணும்
பண்பு சேர்த்தி இல்லையோ!

புழு பூச்சி தொட்டு புலி சிங்கம்
வரை புவியிலே அத்தனை
ஜீவராசிகளுக்கும்

படியளக்கும் என் நிலமடி...
எல்லாம் என்னுள்ளே
அடங்கும் (அடக்கம்)....

பொறுமைக்கும் நானே உதாரணம்,
தருணங்களில் தரைபிளந்து
வம்சத்தையே துவம்சம் செய்யும்
மத வாரணமும் நானே...

சுயநலத்தால் முழுதாய்
எனைச்சுரண்டியதில்நீயே
முதன்மையானவன்,
பஞ்சபூதங்களையும் மாசுபடுத்தி
மகிழ்ந்தவன்!

தீயிட்டு நிலத்தைச் சுட்டவன்!
பிளாஸ்டிக் பை உள்ளிட்ட
கழிவுகள் கொட்டி, மண்ணை
மலடாக்கியவன்! புகையிட்டு
காற்றை சூறையாடியவன்...

வளங்களாய் வாரி ஈன்ற

என்னை மலடாக்கினால், நிலம்
காலமாகுமே! எதிர்காலம்
கேள்விக்குறியாகுமே?

எனது ஆயுள்நீளமே, உன்
வாழ்நாளை வரையறை செய்யும்.

விழித்துக்கொள் மனிதா!

இனியாவது விழித்துக்கொள்!

உறங்கியது போதும், உறங்குவது
போல நடித்ததும் போதும்!

இழப்பு இருவருக்குமே, புத்தியில்
ஏற்றிக்கொள்.
வாழையடி வாழையாய் என் வம்சம்
(நீ உட்பட) தழைக்கவேண்டும்....

வேளை வந்துவிட்டது, என்னுடன்
இணைந்து வேலை செய்!

களை களைய காலம் கனிந்தது,
களமிறங்கு!

நிலம் பேசுகிறேன், உன் நலம்
காக்கவே, நிலம் பேசுகிறேன்!



# குடற்புண் அல்லது வயிற்றுப்புண்

## PEPTIC ULCER

வே.மெர்லின்,
அரசு கீழ்ப்பாக்க மருத்துவ கல்லூரி,மருத்துவமனை, சென்னை.




"வாய்விட்டுச் சிரித்தால், நோய்விட்டு போகும்" என்ற பழமொழி மன அழுத்தத்திற்கு மிகச் சரியாக பொருந்தும்.

குடற்புண் அல்லது வயிற்று புண்-முக்கிய காரணங்களில் ஒன்று தான் "மன அழுத்தம்".

குடற்புண் அல்லது வயிற்றுப்புண் என்பது உணவுக்குழாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடலில் ஏற்படும் சீழ்ப்புண் ஆகும்.

இது 0.5 செ.மீக்கும் அதிகமாகவோ, சமமாகவோ இருக்கும். இது மியூகோசல் அரிப்பு (Mucosal Erosion) என்று விவரிக்கப்படுகிறது.

இந்த நோய் வயது வித்தியாசமின்றி அனைவரையும் தாக்க வல்லது. இதனால் அடிக்கடி வயிற்று வலியும், சாப்பிட முடியாத பிரச்சனையும் ஏற்படும்.

இரைப்பையில் செரிமானத்திற்குத் தேவையான ஹைட்ரோகுளோரிக் அமிலத்தால் உடற் செரிமானப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாகின்றன. குடற்புண் உள்ள சிலருக்கு இந்த அமிலம் அதிகமாகச் சுரப்பதும் உண்டு.

குடல் புண் ஹெலிக்கொபேக்டர் பைலோரி எனும் பாக்டீரியாவினால் தோன்றுகிறது.

### குடற்புண் ஏற்படுவதற்கான காரணங்கள்

- மன அழுத்தம், உணவு வேகமாகவும், அவசரமாகவும்,

உண்பதால்

- புகைப்பிடித்தல்
- புகையிலைப் பயன்பாடு
- மது அருந்துதல்
- வாயுக்கோளாறு
- ஆஸ்பிரின் மற்றும் ஸ்டீராய்டு மருந்துகள் பயன்படுத்தும்போது
- Pancreatic Tumours

## குடற்புண் அறிகுறிகள் :

- வயிற்றில் எரிச்சலுடன் கூடிய கடுமையான வலி
- நெஞ்சு எரிச்சல்
- வயிறு வீங்குதல்
- பசியின்மை

## குடற்புண் கண்டறியும் முறைகள் :

- சிறுநீர் உப்பு, மூச்சு பரிசோதனை
- இரத்தத்தில் நோய் எதிர்ப்பு நிலையின் அளவீடு
- மல ரீதியான பரிசோதனைகள்
- எண்டோஸ்கோபி (ENDOSCOPY)

## குடல்புண்ணைத் தடுத்தல் :

குடல்புண் பாதிப்பின் அளவை உள்நொக்கு (Endoscopy) கருவியால் அளக்கலாம்.

புண்ணில் ஓட்டை ஏற்பட்டிருந்தாலோ, இரத்த கசிவு ஏற்பட்டாலோ உடனடிச் சிகிச்சை அவசியமாகும். இதற்கான சிகிச்சை முறைகள் புண் ஆறுவதற்கும், மீண்டும் ஏற்படாத வகையிலும் அமைக்கப்படுகிறது.

வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தல். புகைப்பிடித்தலை தவிர்த்தல் மது அருந்தாதிருத்தல் கவலை, மன அழுத்தம் ஆகியவற்றை தவிர்த்தால் குடல் புண் வராமல் தவிர்க்க இயலும்.

உணவினை குறைந்த அளவு-அதாவது மூன்று வேளை உணவினை, ஐந்து வேளையாக பிரித்து உண்பதால், குடல் புண் அதிகமாவதை குறைக்கும், எளிதான செரிமானத்திற்கு உதவும்.

உணவினை உண்ணும் போது அமைதியான சுற்றுசூழலில் உண்பதால் Hydrochloric Acid சுரப்பதை குறைக்கும்.

உணவினில் அதிக காரம் (Spicy foods) ஆல்கஹால், கஃபீன் உணவு வகைகள், பானங்கள், சிகப்பு அல்லது கருப்பு மிளகுகளை தவிர்க்க வேண்டும்.

மன அழுத்தம் தரக்கூடிய சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டும்.

---

# தண்ணீர் விட்டோ வளர்த்தோம்!



கி.சதீகஷ்குமார்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா!
இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்! கருகத் திருவுளமோ?
எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரினுள் வளர்ந்த
வண்ண விளக்கிது மடியத் திருவுளமோ?"

என்ற மகாகவி பாரதியின் பாடலைப் பாடும் போதும் வாசிக்கும் போதும் உள்ளத்தில் உணர்வுநிலை கொந்தளித்து துடிப்பதையும் விடுதலைப் போராட்டக் காலம் கண்முன் விரிவதையும் தவிர்க்க இயலாது. தன் பாடல் வரிகளால் தமிழ்நிலத்தையும் தமிழர்களையும் விழித்தெழ வைத்தவன் பாரதி.

தமிழ்மொழியை விடுதலைப் போராட்டக் களத்திற்கு பேராயுதமாய் ஆக்கி பாடல்கள் புனைந்து பிரிட்டிகஷ் படைகளுக்கு அச்சமூட்டி அக்கினிக்குஞ்சாய் திகழ்ந்தவன் பாரதி.

இந்தியத் துணைக்கண்டம் விடுதலைப் பெற்று 75வது அமுதப் பெருவிழா நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்திய தேசம் விடுதலைப் பெற்று ஏகாதிப்பத்தியத்தை விரட்டியடித்து நீண்ட நெடிய வரலாற்றில் தமிழகத்தின் பங்கும் தமிழர்களின் முன்னெடுப்பும் களம் கண்டு எண்ணற்ற போராளிகள், வீரர்கள், ஈகியர்கள் இன்னுயிர் ஈந்தமை நிகரற்றது.

ஆங்கிலேயே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிரான முதல் கலகக்குரல் தமிழர்களுடையது. முதல் எதிர்ப்பு போர் தென்னாட்டின் போராகும்.

## விடுதலைப்போரில் தமிழகம், தமிழர்கள்

ஆனால் இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு 1857 ஆம் ஆண்டின் சிப்பாய்க் கலகத்தில் இருந்தே எழுதப்பட்டுள்ளது என்பது பெருந்துயராகும்.

பிரிட்டிகஷ் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளும் போர்களும் தென்தமிழ் நாட்டிலிருந்தே முதலில் கிளம்பிற்று. குறிப்பாக பாளையக்காரர்கள் மதுரை நாயக்க மன்னர்களுக்கு கட்டுப்பட்ட சிற்றரசர்களாக இருந்தநிலையில் பிரிட்டிகஷ் படைகளுக்கு அரசுக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலையில் இருந்த நாயக்க மன்னர்களுக்கு கப்பம் கட்ட மறுத்தனர். ஆற்காடு, மதுரை உள்ளிட்டப் பகுதிகள் ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்த வேண்டிய நிலையில் கம்பெனியார் வரி வசூல் செய்யும் உரிமையை பெற்றனர்.

அப்பொழுது எழுந்த கிளர்ச்சி பெரும் தீப்பிழம்பாய் வெடித்தது. வரிசெலுத்த மறுத்து எதிர்த்த வீரன் அழகு முத்துக்கோன், பூலித்தேவன், சேதுபதி, வேலுநாச்சியார், மருதுபாண்டியர்கள், கட்டபொம்மன் உள்ளிட்டோரின் குரலே ஆங்கிலேயருக்கு எதிரான இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் குரலாகும்.

வீரன் அழகு முத்துக்கோன் (1728-1757) நெல்லைச் சீமை கட்டாலங்குளம் பகுதியின் சிற்றரசர், பூலித்தேவன் நெல்லை மாவட்டம் நெற்கட்டான் செவ்வலைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிப்புரிந்தவர். 1750 இல் இராபர்ட் கிளைவ் திருச்சிக்கு வந்தபோது பூலித்தேவன் படையுடன் வந்து ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டு வென்றார். அதனைத் தொடர்ந்து சிவகங்கை இராமநாதபுரம் பகுதிகளில் முத்துவடுகநாதர், வீரமங்கை வேலுநாச்சியார் படைத்தளபதிகளான மருது சகோதரர்கள் யாவரும் 1857 ஆம் ஆண்டிற்கு முன்னரே ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட்டு களம் கண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புரட்சி அதிவேகத்தில் பரவிய 1857ஆம் ஆண்டுக்கு முன்னரே ஆங்கிலேயப் படைகளுதுக்கு எதிரானவர்கள் ஒன்று திரண்டனர். எதிரி எதிர்பாரா வகையில் தங்களுடைய நிலைகளைத் தாங்களே தீயிட்டு அழித்துவிட்டு எதிரி படைமீது குதித்து அழிக்கும் கொரில்லாப் போர்முறையை வேலுநாச்சியர் படைப்பிரிவில் இருந்த குயிலி ஆங்கிலேயப் படையினரின் ஆயுதக்கிடங்கில் குதித்து தானும் மாண்டிந்து எதிரிநிலைகளையும் அழித்து நிலைகுலையச் செய்தார்.

மட்டுமின்றி மருது சகோதரர்களின் தீரச்செயல்கள் ஊமைத்துரை, செவத்தையா உள்ளிட்ட வீரர்களின் நெஞ்சுரம் வரலாற்றில் ஒளிர்கிறது.

எனவே 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழகத்தில் விடுதலைக் குரல் ஒலிக்கத் தொடங்கிய வரலாற்றை பதிவு செய்ய வேண்டியது நமது கடமையாகும். விடுதலைப்போரில் இன்னுயிர் ஈந்த தமிழ் ஈகியர் பட்டியல் அளவிடக்கரியது.



19 ஆம் நூற்றாண்டில் இந்தியத் தாய்க்கு இந்தியத் திருநாட்டில் முதல் சிலைவடிவம் தந்தவர்கள் சுப்பிரமணியசிவா, வ.உ.சி. மகாகவி பாரதியார் மூவரும் இணைந்து நெல்லைச் சீமையில் ஆங்கிலேயருக்கு எதிராக பெரும் கிளர்ச்சியை உருவாக்கினர்.

‘ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமா’
என்றும்,
‘மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ’

என்று மகாகவி செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. சிறையில் நோவதைக் கண்டு வெகுண்டு எழுதி மக்களிடன் உணர்வையும், எழுச்சியையும் உண்டாக்கினார். ‘சிவம் பேசினால் சவம் எழும்’ என்பதற்கேற்ப சுப்பிரமணிய சிவா தொழிலாளர்களிடையே உரத்து முழங்கி விடுதலை உணர்வை ஊட்டினார்.

காந்தியத்தின் மீது நம்பிக்கைக் கொண்ட ஆயிரமாயிரம் தமிழர்கள் காந்தியக் கொள்கையைப் பின்பற்றி கதர் ஆடையை அணிந்து கதர்த்துணிகளை தலையில் சுமந்து மக்களிடம் அந்நியப் பொருட்களை தவிர்க்கச் சொல்லி தன்னிறைவு பெற கிராமியப் பொருளாதாரம் உயர தற்சார்பு வாழ்வியலை மேற்கொள்ள காந்திய கொள்கைகளைப் பின்பற்றினர்.

மகாத்மா காந்தியடிகள் அரையாடை உடுத்தியது தமிழகத்தின் மதுரையில்தான், அவர் அரையாடை உடுத்திய நூற்றாண்டு இவ்வாண்டு 'மகாத்மா காந்திக்கு இந்தியாவிலேயே முதன்முதலில் அருங்காட்சியகம் அமைத்ததும் மதுரையில் தான்.

மாத்மா காந்தி வலியுறுத்திய பூரண மதுவிலக்கு கள்ளுண்ணாமையை ஏற்று ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்கள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார் என்பது வரலாறு.

தமிழகத்தின் தான் முதன்முதலில் காந்தியத்தின் பேரில் திண்டுக்கல் பகுதியில் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. திருக்குறளை லியோ டால்ஸ்டாய் வழியாக ஆங்கிலத்தில் படித்துவிட்டு 'அஹிம்சை' எனும் சிந்தனையை முன்னெடுத்தவர் காந்தியடிகள். அதன்பிறகு வருகையில் அடுத்தப்பிறவி என்ற ஒன்று எனக்கு வாய்க்குமென்றால், தமிழகத்தில் தமிழராகப் பிறந்து திருக்குறளை அதன் தாய்மொழியிலேயே கற்க வேண்டும் என ஆசைப்படுகிறேன் என்றார்.

